





## நோக்கம்

ஊடகம் என்ற பதத்துடன் எமது நினைவுக்கு வருவது வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், செய்தி ஆசிரியர்கள் போன்றவர்களே. ஊடக நிறுவனம் என்பது அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களாகும். ஒரு அலைவரிசையுடன் ஊடகப் பரிமாற்றம் செய்யும் போது அந்த நிறுவனத்தின் பின்னணியை நாம் மறந்து விடுகின்றோம். அது மட்டுமன்றி அந்த ஊடகத்தை நிருவகிக்கும் நிறுவனம் எது என்பது பற்றிக்கூட நாம் அறியாதிருக்கக்கூடும்.

அத்தகைய ஊடக நிறுவனங்கள், அவற்றின் உரிமையாளர்கள், அவர்களின் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அவர்களின் ஊடகங்கள் ஆகியன பற்றி சமநிலையில் விமர்சிப்பதற்குத் தேவையான தேர்ச்சியை உங்களுக்கு வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும். அதற்காக நீங்கள் ஊடகம் பற்றிய தேடலில் ஈடுபட வேண்டும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## 4.1 இலங்கையின் ஊடக நிறுவன உரிமையின் தோற்றமும் வளர்ச்சியும்

### அ) அரச தனியார் ஊடக உரிமைகள் வளர்ச்சியடைந்த விதம்

ஊடக நிறுவனங்களற்ற ஒரு சமூகத்தைத் தேடிக் கொள்வது முடியாத காரியம். ஊடகம் என்பதை இனங்காணும்போது அதன் ஒரு பிரதான இயல்பாகக் காணப்படுவது ஒரு முறைசார் நிறுவனமாகச் செயற்படுவதாகும். அதற்கான காரணம் அதில் காணப்படும் பாரிய செயலொழுங்காகும். ஒரு புத்தகம் வெளியிடும் பணியைத் தனியாகச் செய்ய முடியுமாக இருப்பினும், ஒரு பத்திரிகை வெளியிடுவதையோ, வானொலி அல்லது தொலைக்காட்சி நிறுவனத்தையோ தனியாக நடத்துதல் சாத்தியமில்லை. எனவே ஊடகம் ஒரு கைத்தொழிலாக விரிவடைந்ததுடன் அதன் உரிமையும் முறைசார் விதத்திலும், ஒழுங்கமைப்பு ரீதியாகவும் விரிவடைந்தமை இலங்கையின் ஊடக வரலாற்றை ஆராயும்போது தெரியவருகிறது.

படம் :- 4.1.2
பத்திரிகைகள் சிலவற்றின் பெயர்கள்

உலகின் வேறு நாடுகளைப் போன்றே இலங்கையிலும் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட ஊடகம் பத்திரிகையாகும். பின்னர் வானொலி, தொலைக்காட்சி என்பன ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான காலப் பிரிவு நூற்றாண்டுகளைத் தாண்டிச் செல்கிறது. நினைவில் வைத்திருக்க வேண்டிய மற்றுமொரு விடயம் யாதெனில் இலங்கையில் தாபிக்கப்பட்ட ஊடகங்கள் அவ்வக் காலங்களில் நிலவிய சமூக அரசியல், பொருளாதாரச் செயலொழுங்குடன் நேரடியாகவே தொடர்புபட்டுக் காணப்பட்டன என்பதாகும்.

படம் :- 4.1.1
தொலைக்காட்சி செல்வழிகள் சிலவற்றின் இலச்சினைகள்

## பத்திரிகைகள்

வரலாற்றுச் சான்றுகளின்படி இலங்கையில் 1737 ஆம் ஆண்டு அச்சியந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு அச்சுஊடகம் ஆரம்பமானது எனினும் அச்சிடலுக்குத் தேவையான கடதாசி உள்நாட்டில் இருந்ததாகக் கூறமுடியாது. இலங்கையின் முதலாவது பத்திரிகையாக 1832 ஆம் ஆண்டில் அரச அனுசரணையுடன் 'கலம்பு ஜெர்னல்' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் அதன் ஆசிரியர் அது ஒரு அரசாங்கப் பத்திரிகையல்ல என்று குறிப்பிட்டார். இப்பத்திரிகை 1833 இல் நிறுத்தப்படக் காரணம் அதன் ஆசிரியர் இங்கிலாந்து அரசைக் கடுமையாக விமர்சித்தமை தான் என்று தெரிய வந்துள்ளது.

இரண்டாவதாக 1834 ஆம் ஆண்டு அக்லாண்ட், டார்லி ஆகிய இருவரும் சேர்ந்து 'ஒப்ஸவர்', 'கொமர்ஷல் அட்வர்டைஸர்' ஆகிய ஆங்கில பத்திரிகைகளை தனியார் உரிமையாக ஆரம்பித்தனர்.

இவ்வாறு அச்சுக்கலை படிப்படியாக பரவியதைத் தொடர்ந்து உள்நாட்டுப் பத்திரிகைத் துறைக்கு அத்திவாரமிட்டது. 1841 ஜனவரி 07 ஆம் திகதி இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையான 'உதயதாரகை' என்ற பத்திரிகை ஹென்றி மார்டின், எஸசப் பெய்ஷன் ஆகிய இரு ஆசிரியர்களால் மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அதன்பின்பு 1841 இல் உதயாதித்தன், 1845 இல் உரைகல், 1848 இல் இலங்கை நேஷன், 1853 இல் 'வித்தியா தர்ப்பணம்' மற்றும் 'மிலிட்டரி மிரர்,1859 இல் 'பால்ய நேஷன்' என்ற பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. புலத்கம தம்மாலங்கார தேரரின் தலைமையில் தாய்லாந்து மன்னரின் உதவியுடன் இலங்கையின் முதலாவது சிங்களப் பத்திரிகையான " லங்கோபகாரய" காலி லங்கோபகாரய அச்சகத்தில் 1860 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சிங்களப் பத்திரிகைகள், இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தை நோக்கியதாக மக்கள் தலைவர்களிடையே வேகமாக விரிவடைந்தது. அதற்கான சில உதாரணங்களைப் பின்வருமாறு கூறலாம்.

| உரிமை | பத்திரிகை/சஞ்சிகை |
|---|---|
| மகாபோதி சங்கம் | சிங்கள பௌத்தய |
| பரம விஞ்ஞானார்த்த சங்கம் | சரசவி சந்தரச |
| கத்தோலிக்க சபை | ஞானர்த்த பிரதீபய |
| சூரியமல் சங்கம் | கம்கருவா |
| இலங்கை சமசமாஜக் கட்சி | சமசமாஜ |
| சிங்கள மகாசபா | சிங்கள பலய |

1908 இல் வெளியிடப்பட்ட "ஸ்டாண்டர்ட்" என்ற பத்திரிகை வசதி படைத்த சிங்களவர்களால் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டதாகும். 1909 இல் எச். எஸ் பெரேராவின் உரிமையாக தினமின பத்திரிகை வெளியிடப்பட்டது. பிற்காலத்தில் எச்.எஸ். பெரேரா அவர்களால் தினமின பத்திரிகையை தனியாக நடத்த முடியாமற் போனதால் டி. ஆர். விஜேவர்தனாவுக்கு விற்பனை செய்தார்.



படம் :- 4.1.3 பத்திரிகைகள் சில

அதன் பின்னர் இலங்கை ஊடகவியல் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாக அமைந்தது, டி. ஆர். விஜேவர்தன அவர்களால் லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டமையாகும். அதற்காக 'சிலோன் டெயிலி நியூஸ்' மற்றும் ஒப்ஸவர் ஆகிய பத்திரிகைகளின் உரிமையைத் தனதாக்கிக் கொண்டார்.

1846 இல் ஆரம்பிக்கப்பட்ட 'ரைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகை நிறுவனம் இலங்கையின் இரண்டாவது பத்திரிகை நிறுவனமாகப் பிரபல்யம் பெற்றது. 1947 இல் டி.பி. தனபால என்பவரின் தலைமையில் லங்காதீப பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

இதிலிருந்து தெரியவருவது ஆரம்பகாலத்தில் ஆசிரியரையே உரிமையாளராகக் கொண்டு பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் தொடர்ந்து அவ்விதமாகவே நடத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டமையாகும். இதன் பெறுபேறாக படிப்படியாக வணிகத்தன்மை வாய்ந்த முறைசார் ஒழுங்கமைப்புகளாக பத்திகைத் துறை மாற்றமடையத் தொடங்கியது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் நிலைமை மேலும் விரிவடைந்து பத்திரிகை வெளியீடு ஒரு வணிக நிறுவனமாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

1961 இல் எம்.டி. குணசேன கம்பனியின் உரித்துரிமையின் கீழ் வரையறுக்கப்பட்ட சுயாதீனப் பத்திரிகைக் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. அதன் நாளாந்த வெளியீடுகளாக சிங்களமொழியில் 'தவச', தமிழ்மொழியில் 'தினபதி' யும் ஆங்கிலத்தில் 'சன்'னும் வெளியிடப்பட்டன. ஞாயிறு வெளியீடுகளாக முறையே ரிவிரஸ, சிந்தாமணி என்பன வெளியிடப்பட்டன. இதனைவிட 'சன்' (Sun), 'வீக் எண்ட்' (Weekend) என்ற ஆங்கில பத்திரிகைகளையும் இந்நிறுவனம் வெளியிட்டது.

இதனையடுத்து சில தசாப்தங்களில் இலங்கைப் பத்திரிகைத் துறை வரலாற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. 1973 இல் லேக் ஹவுஸ் நிறுவன

அரசுடைமையாக்கப்பட்டமை 1974 இல் குணசேன பத்திரிகை நிறுவனம் அரசாங்கத்தினால் மூடப்பட்டு முத்திரையிடப்பட்டமை. 1985 இல் டைம்ஸ் பத்திரிகை நிறுவனம் மூடப்பட்டமை என்பன அத்தகைய நிகழ்தகவுகளாகும்.

1981 இல் உபாலி பத்திரிகை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. திவயின, இரிதா திவயின, த ஐலண்ட் ஆகிய பத்திரிகைகளும் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இந்நிறுவனத்தின் உரிமையாளர் உபாலி விஜேவர்தன ஆவார்.




படம்:- 4.1.4 பத்திரிகைகள் சில

லேக் ஹவுஸ் தாபனத்தின் உரிமையாளராக இருந்த டி ஆர். ஜயவர்தனவின் புதல்வராக ரன்ஜித் விஜேவர்தன 1986 இல் ‘விஜய’ பத்திரிகை நிறுவனத்தை ஆரம்பித்தார். லேக் ஹவுஸ் நிறுவனத்தை அரசாங்கம் பொறுப்பேற்கும் போது அதன் தலைவராக இருந்தவரும் இவரே. டைம்ஸ் நிறுவனத்தை கொள்வனவு செய்ததுடன் ‘லங்கா தீப’ பத்திரிகை மீண்டும் ஆரம்பிக்க வழியேற்பட்டது.

ஆரம்ப காலகட்டத்தில் பல தமிழ்ப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன. லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் அந்த வரிசையில் முதலாவதாகும். அதனைத் தொடர்ந்து வீரகேசரி ஆரம்பிக்கப்பட்டது. தினக்குரல், சுடர் ஒளி ஆகிய பத்திரிகைகள் பிற்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. நவமணி, எங்கள் தேசம், மீள்பார்வை, மித்திரன், விஜய் போன்ற வாராந்த மாதாந்தம் பத்திரிகைகளும் இவற்றில் அடங்கும்.

### வானொலி



படம் :- 4.1.5
இ. ஒ. கூட்டுத்தாபனத்தின் ஆரம்பம்

1924ஆம் ஆண்டு இலங்கையின் முதல் வானொலி சேவை அரசுடைமையாக ஆரம்பிக்கப்பட்டது.

1949 இல் இது இலங்கை வானொலி சேவைத் திணைக்களம் என்ற பெயரில் ஒரு அரசாங்கத் திணைக்களமாக மாற்றப்பட்டது.

1966 இல் இது இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனமாக மாற்றப் பட்டது. இதன்படி இலங்கையில் வானொலி சேவை அரசாங்கத்தின் பொறுப்பிலேயே ஆரம்பிக்கப்பட்டதைக் காணலாம்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

திறந்த பொருளாதாரம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடரந்து ஏற்பட்ட மாற்றங்களினால் தனியார் வானொலிச் சேவை ஆரம்பிக்கப்படுவதில் கவனம் திரும்பியது. அதுவரை பத்திரிகைகள் மட்டுமே தனியார் உடைமையாக நடத்தப்பட்டு வந்தன. தொலைக்காட்சி சேவை அப்போது ஆரம்பமாயிருக்க வில்லை. வானொலி அரசுரிமையாய் இருந்தது. தனியார் வானொலிச் சேவைக்காக அனுமதிப் பத்திரம் வழங்க அரசு தீர்மானித்தது. இதன்படி கடந்த இரண்டு தசாப்தங்களில் ஏராளமான தனியார் வானொலிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் உரிமை பெரும்பாலும் தனியார் கம்பனிகளைச் சார்ந்ததாகவே உள்ளது. அவ்வாறல்லாத ஒரே சேவை ரன்கிரி தம்புள்ளை விகாரையை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள வானொலிச் சேவையாகும்.



படம் :- 4.1.6 வானொலி நிலையங்கள் சிலவற்றின் இலச்சினைகள்

### தொலைக்காட்சி

இலங்கையில் முதலாவது தொலைக்காட்சி சேவை தனியார் துறையினராலேயே ஆரம்பிக்கப்பட்டது. 1979 ஏப்ரில் 13 ஆம் திகதி இது ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான பரீட்சார்த்த ஒளிபரப்பு 1974 முதல் 1979 வரை தொடர்ந்தது. அணில் விஜேவர்தன, சான் விக்கிரம சிங்ஹ ஆகிய இலங்கையர்களும் பொபி கிரிஸ்டி என்ற ஆங்கிலேயரும் இணைந்து இதனை ஆரம்பித்தனர். பின்னர் 1979 ஜூன் 05 ஆம் திகதி இந்தச் சுயாதீன தொலைக்காட்சி சேவை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. அன்று முதல் அது அரச நிறுவனமாக மாற்றப்பட்டது.

1982 ஆம் ஆண்டில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. பாராளுமன்றச் சட்ட மூலமொன்றின் மூலம் இக்கூட்டுத்தாபனம்

ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் தனியாள் தொலைக்காட்சி சேவைகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதில் அரசு கவனம் செலுத்தியது. தனியார் பத்திரிகைகள் விடயத்தில் அரசின் தலையீடு காணப்படாத போதும் இலத்திரனியல் ஊடகம் தொடர்பில் அரசாங்கத்திடம் அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் என்று விதிக்கப்பட்டது. தொலைத் தொடர்பு நெறிப்படுத்தல் ஆணைக்குழுவே இத்தகைய அனுமதிப் பததிரங்களை வழங்குவதற்கும் பொறுப்பாக உள்ளது.



படம் :- 4.1.6 தொலைக்காட்சி நிலையங்கள் சிலவற்றின் இலச்சினைகள்

## ஆ) ஊடக நிறுவன உரிமையில் அரசின் பங்களிப்பு

இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச ஊடக நிறுவனங்கள் பற்றிய விபரம்

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ஓர் அரச கூட்டுத்தாபனம்)
- ஐக்கிய செய்திப் பத்திரிகை நிறுவனம் - (அரச கம்பனி)
- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் - (அரச கூட்டுத்தாபனம்)
- சுயாதீன தொலைக்காட்சி சேவை - (அரச கம்பனி)
- லக் ஹண்ட வானொலிச் சேவை - (அரச கம்பனி)

இதன் படி அரசாங்க ஊடக நிறுவன உரிமைகளும் ஒரே அமைப்பில் இல்லை. அரசாங்கக் கூட்டுத்தாபனம் என்பதன் கருத்து பாராளுமன்ற சட்டமூலமொன்றின்படி அமைக்கப்படும் ஒரு நிறுவனமாகும். இவ்வகைக் கூட்டுத்தாபனம் ஒரு பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படும். தலைவர் உட்பட பணிப்பாளர் சபை அமைச்சரால் நியமிக்கப்படுவார்கள்.

அரசுடமையாக்கப்பட்ட கம்பனி என்பது கூட்டுத்தாபனத்திலிருந்து வேறுபட்டதாகும். மேலோட்டமாகப் பார்க்கும் போது இது அரச நிறுவனமாகக் காணப்பட்ட போதும் சட்டத்தின் முன்னால் இவையிரண்டும் வேறுபட்ட நிலைமையைக் கொண்டவை. சுயாதீன தொலைக்காட்சி சேவை, லேக் ஹவுஸ்

நிறுவனம் என்பன அவற்றின் பங்குதரார்களுக்கே சொந்தம். அதிக எண்ணிக்கையிலான பங்குகளை அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளதால் அவற்றின் உடைமை அரசாங்கத் திறைசேரியைச் சாரும். இதன் படி சுயாதீன தொலைக்காட்சி சேவை, லேக் ஹவுஸ் என்பவற்றின் தலைவரையும் பணிப்பாளர் சபையையும் தெரிவு செய்யும் அதிகாரம் திறைசேரியின் தலைவருக்கேயுண்டு. அமைச்சர் இவர்களை நியமிப்பதாக இருப்பினும் நியமனக் கடிதங்களில் கையொப்பமிடுவது திறைசேரியின் தலைவரேயாவார்.

### இ) ஊடக நிறுவன உரிமையில் தனியார் பங்கு

அரசுக்குச் சொந்தமில்லாத ஏனைய அனைத்து ஊடக நிறுவனங்களும் தனியார் கம்பனிகளுக்குச் சொந்தமானவை. அரசாங்கப் பத்திரிகை வெளியீட்டு நிறுவனம் இதிலிருந்து சற்று வேறுபட்டதாகும். அது வரையறுக்கப்பட்ட அரசாங்கக் கம்பனியாகச் செயற்படுகின்றது. அதில் பங்குதாரர்கள் எவரும் முதலீடு செய்யவில்லை. அரச கம்பனிச் சட்டத்தின் கீழ் இது அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய ஊடக நிறுவனங்கள் அனைத்தும் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளாகும். இவை பெரும்பாலும் வேறு வணிகங்களின் சகோதர நிறுவனங்களாகச் செயற்படுகின்றன. ரன் கிரி தம்புள வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் இரண்டும் வேறுபட்ட உரிமை அமைப்பைக் கொண்டதாகவுள்ளன.

தனியார் ஊடகக் கம்பனிகளின் ஒரு பொது இயல்பானது அவை பொதுக்கம்பனிகளாக இருப்பதில்லை என்பதாகும். அதாவது எவரும் அவற்றின் பங்குகளைக் கொள்வனவு செய்ய முடியாது. அவை முழுமையாகத் தனியார் உடமைகளாகும்.

## 4.2 ஊடக நிறுவனங்களின் உள்ளகச் செயற்பாடுகளின் இயல்பு

பொதுக் கம்பனியாக, அரச கம்பனியாக அல்லது அரச கூட்டுத்தாபனமாக இருந்தாலும் அவை அனைத்தும் ஒரு பணிப்பாளர் சபையினாலேயே நிர்வகிக்கப்படுகின்றன. எனினும் இவற்றுள் நிறைவேற்று அதிகாரம் தனியொரு பிரதான நிறைவேற்று அதிகாரி வசமேயுண்டு.

| நிறுவனம் | பிரதான நிறைவேற்று நிர்வாகி |
|---|---|
| இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | பணிப்பாளர் நாயகம் |
| இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | பணிப்பாளர் நாயகம் |
| சுயாதீன தொலைககாட்சி சேவை | பொது முகாமையாளர் |
| லக்ஹண்ட வானொலிச் சேவை | பொது முகாமையாளர் |
| ஐக்கிய பத்திரிகை கம்பனி | பொது முகாமையாளர் |
| வேறு தனியார் கம்பனிகள் | பொது முகாமையாளர் |

பணிப்பாளர் நாயகம் அல்லது பொதுமுகாமையாளர், நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இருப்பதோடு அவரின் பணிகள் வேறு இருவரிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் இருக்கும். ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பாக ஒவ்வொருவர் நியமிக்கப்படுவர். இதனடிப்படையில் பிரதிப்பணிப்பாளர் நாயகம், உதவிப்பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள், பிரதி, உதவி பணிப்பாளர்கள் நியமிக்கப்படலாம். அல்லது பொது முகாமையாளர், பிரதி, உதவி முகாமையாளர்கள் நியமிக்கப்படலாம்.

இதன்படி அரசாங்க அல்லது தனியார் ஊடக நிறுவனங்கள் தம் பணிகளை முறையாகப் பகிர்ந்து கருமமாற்றுவதைக் காண முடிகின்றது. இவ்வனைத்து நிறுவனங்களையும் பொதுவாக நோக்குமிடத்து அவற்றின் பணி இயல்புகளை இரு பிரிவுகளுக்குள் அடக்கலாம்.


1. பொதுக் கருமங்கள்
2. தொழில் சார் கருமங்கள்

நிர்வாகம், நிதி, பாதுகாப்பு, போக்குவரத்து, பராமரிப்புச் சேவைகள் என்பன பொதுக் கருமங்களில் அடங்கும். நிறுவனத்தின் இருப்புக்கு இப்பிரிவு முக்கிய பணிகளை ஆற்றும். இரண்டாவது தொழில்சார் பிரிவாகும். ஊடக நிறுவனமொன்றில் தொழில்சார் பிரிவுக்கு உட்படுவது ஊடகவியலாளர்களே. இலத்திரனியல் ஊடகமொன்றின் துணைச் சேவைகளை வழங்கும் புகைப்படப் பிடிப்பாளர்கள், ஒளி, ஒலி, ஒப்பனை, நெறியாள்கை, பொறியியல் சேவைகளும் இப்பிரிவுகளுட்படும். இலங்கையில் இவ்விரு பிரிவுகளும் சற்றுத் தெளிவற்ற நிலையிலே காணப்படுகின்றன. பொதுப் பதவிகளும் தொழில்சார் பதவிகளும் சரியாக வேறுபடுத்தப்படாமை இதற்கான காரணமாகும்.

பத்திரிகை, வானொலி அல்லது தொலைக்காட்சி நிறுவனமொன்றின் உள்ளகக் கட்டமைப்பு மற்றும் அடிப்படை இயல்புகள் பெரும்பாலும் ஒத்ததாகவே இருப்பதுடன் விஷேட வேறுபாடுகளும் உண்டு. ஊடகங்களைப் பொருத்து அவற்றிற்காக தொழில்சார் கருமங்கள் வேறுபடுவதே இதற்கான காரணம். இவற்றை விளங்கிக் கொள்வதற்காக பின்வரும் கட்டமைப்புக் குறிப்புகளைக் கற்பது போதுமானது ஆகும்.

## அ) பத்திரிகை நிறுவனமொன்றின் உள்ளக கட்டமைப்பும் செயற்பாட்டு அடிப்படையும்

பத்திரிகை நிறுவனமொன்றின் பொதுக் கட்டமைப்பு



பத்திரிக்கையின் முதன்மை அதிகாரி அதன் பிரதம ஆசிரியரே. பத்திரிகையின் அனைத்து விடயங்கள் குறித்தும் இறுதிப் பொறுப்பு ஆசிரியரைச் சாரும். ஆசிரியர் தலையங்கம் எழுதுவது அவரது பொறுப்பாகும். பிரதான செய்திகளைத்தெரிவு செய்து பிரசுரிப்பது தொடர்பாக பிரதம ஆசிரியர் நேரடியாக ஈடுபடுவோரின் பணிகளை உதவி ஆசிரியர்களுக்குப் பங்கீட்டு வழங்க முடியும். ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பாக உதவி ஆசிரியர்கள் இருப்பர். இவர்களையெல்லாம் உள்ளடக்கிய அமைப்பை ஆசிரியர் பீடம் எனலாம்.

**பிராந்தியச் செய்திப் பிரிவு**

பத்திரிகைக்கான செய்திகளை வழங்குபவர்கள் அவற்றின் பிராந்தியச் செய்தியாளர்களே. அவர்கள் தொடர்பில் கரும மாற்றுபவர் பிராந்திய செய்தி ஆசிரியரே. அதன் கீழ் பதவி நிலைச் செய்தியாளர்கள், பதவி நிலைக் கட்டுரையாளர்கள் இருப்பர்.

**வெளிநாட்டுச் செய்திப் பிரிவு**

வெளிநாட்டுச் செய்தி ஆசிரியர் இப்பிரிவுக்குப் பொறுப்பாக இருப்பார். உலக நிகழ்வுகள் குறித்துக் கவனம் செலுத்தி செய்திகளைப் பெற்றுக் கொள்வதும், உரிய முறையில் அவற்றை நெறிப்படுத்திப் பிரசுரிப்பதும் அவரின் பொறுப்பாகும். இதற்காகப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. தற்காலத்தில் நவீன தொழில் நுட்பத்தின் கீழ் வெளிநாட்டுச் செய்திகளைப் பெற்றுக் கொள்ள பரந்த அளவில் இணையம் பயன்படுத்தப்படுகின்றது. சர்வதேச செய்தி முகவர் நிறுவனங்களிடமிருந்து நேரடியாகவும் செய்திகள் கிடைப்பதுண்டு.

**விளையாட்டு / பெண்கள் /சிறுவர் / சமயப் பிரிவுகள்**

ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பாக உதவி ஆசிரியர்கள் இருப்பர். தத்தம் பிரிவுடன் தொடர்புடைய கட்டுரைகள், செய்திகள், புகைப்படங்கள், ஆகியவற்றைத் தேடிப் பெறுவது, பதிப்பாக்கம் செய்வது, பிரசுரத்துக்காக தயார்படுத்துவதும் இவர்களது பொறுப்புகளாகும்.

**சிறப்பு அம்சப் பிரிவு**

இது பத்திரிகையின் ஜனரஞ்சகமான ஒரு பிரிவாகும். காலத்துக்குக் காலம் வாசகர்கள் ஆர்வம் காட்டும் அல்லது ஆர்வ மூட்டச் செய்ய வேண்டிய விடயங்களைக் கவர்ச்சியாக, ஆக்கத்திறனாக முன்வைப்பது இப்பிரிவின் பொறுப்பாகும். இப்பிரிவின் உதவி ஆசிரியரின் கீழ் சிறப்புக் கட்டுரையாளர்கள் கடமையாற்றுவதுடன், சுயாதீன எழுத்தாளர்களும், ஊடகவியலாளர்களும் இத்துறைக்காகப் பணியாற்றுவார்கள்.

## ஒளிப்படப் படப்பிரிவு

பத்திரிகையில் பிரசுரிப்பதற்குத் தேவையான ஒளிப்படங்களைத் தெரிவு செய்து வழங்குதல் புகைப்படப்பிரிவு உதவி ஆசிரியரின் பொறுப்பாகும். இதற்காக நியமிக்கப்பட்ட நிலையப் படப்பிடிப்பாளர்களும் சுயாதீனப் புகைப்படக் கலைஞர்களும் சேவையில் அமர்த்தப்படுவர். இதனைவிட இணையம் மற்றும் பல்வேறு செய்திமுகவர்களிடமிருந்தும் புகைப்படங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

## சித்திரப் பிரிவு

பத்திரிக்கைக்குத் தேவையான சித்திரங்களை வரைவது இப்பிரிவின் பொறுப்பாகும். பதவிநிலை சித்திரக்கலைஞர்களும், சுயாதின ஓவியர்களும் இப்பிரிவுகளில் பணியாற்றுவார்கள்.

## ஒப்பு நோக்கல் மொழி செம்மையாக்கப் பிரிவு

பத்திரிகையில் மொழி செம்மையாக இருப்பது மிக முக்கியம். இதற்காக பயிற்சி பெற்ற மொழிப் பதிப்பாசிரியர்கள், ஒப்பு நோக்குனர்கள் பணியாற்றுகின்றனர். ஒப்புநோக்குவது என்பதன் கருத்து , கணினியில் எழுத்தமைத்து எடுக்கப்பட்ட அச்சுப் பிரதியை மூலப் பிரதியுடன் ஒப்பிட்டுச் சரிபார்ப்பதாகும். மொழிச் செம்மையாக்கம் என்பதன் கருத்து மூலப் பிரதியிற் கூட மொழிப் பிழைகள், இலக்கணப் பிழைகள் இருந்தால் அவற்றை சரி செய்து செம்மைப்படுத்துவதாகும்.

## விளம்பரபீடம்


பத்திரிகைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு பிரதான பிரிவாக இது காணப்படுகின்றது. விளம்பரங்கள் ஆக்கத்திறனுடன் வடிவமைக்கப்படினும் அவை செய்திகளில் இருந்து வேறுபட்டவைகளாகும். பத்திரிகையில் பிரசுரிப்பதற்கான விளம்பரங்களைப் பெற்றுத் தயார்படுத்துவது விளம்பரப் பிரிவின் பொறுப்பாகும். பத்திரிகையின் எப்பக்கத்தில் எந்த அளவில் விளம்பரத்தைப் பிரசுரிப்பது என்பது குறித்துத் தீர்மானிப்பதும் அவற்றை அச்சகப் பகுதிக்கு அனுப்புவதும் விளம்பரப் பிரிவின் பணிகளாகும். குறிப்பிட்ட பக்கங்களில் விளம்பரங்கள் அறிவித்தல்கள் வடிவமைக்கப்பட்ட பின் எஞ்சிய இடங்களில் செய்திகளைக் கட்டுரைகளைப் பிரசுரிக்க முடியும். சில காலங்களில் விளம்பரங்கள் அதிகரித்து வாசகர்களுக்கான இடம் குறையும் நிலையும் உண்டு. இதற்கான பொறுப்பை ஆசிரியர்பீடம் ஏற்க முடியாவிட்டாலும் வாசகர்களுக்குப் பொறுப்பு கூறும் கடமை ஆசிரியர் பீடத்துக்குண்டு.

பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்கப்படும் பக்கத்தையும், அளவையும், பயன்படுத்தும் நிறங்களைப் பொறுத்தும் விளம்பரத்தின் கட்டணம் தீர்மானிக்கப்படும். முதற்பக்கத்தில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களின் கட்டணம் அதிகமாக இருக்கும். முழு அல்லது அரைப் பக்கங்களாக, பத்திகளாக, சென்ரிமீற்றர் அளவுகளாக, சிறுவிளம்பரங்கள் தேவைக்கேற்ப கட்டணம் செலுத்தி பத்திரிகைளில் இடத்தை ஒதுக்கிக் கொள்ளலாம். இவ் விளம்பரங்களுக்கான

கட்டணங்கள், சொற்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அறவிடப்படும். பத்திரிகைக் காரியாலயத்தின் விளம்பரப் பிரிவுக்கு நேரடியாகச் சமூகமளித்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதேச முகவர்களூடாகவோ விளம்பரங்களை வழங்க முடியும். விளம்பரப் பிரிவுக்கும் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்துக்குமிடையே நேரடித் தொடர்பு கிடையாது. இதனால் விளம்பரங்களில் முன்வைக்கப்படும் கருத்துக்களுக் கெதிரான கட்டுரைகளும் சில வேளைகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படலாம்.

## ஆ) வானொலி நிறுவனமொன்றின் உள்ளகக் கட்டமைப்பும் செயற்பாட்டு அடிப்படையும்

### வானொலி நிறுவனப் பொதுக் கட்டமைப்பு



இதன் உள்ளகப் பணிகளின் இயல்பு, நிறுவனத்துக்கேற்ப வேறுபடும். விசேடமாக நவீன தொழில் நுட்பத்தின் பங்களிப்புடன் இயங்கும் வானொலிச் சேவைகளில் மிகக் குறைந்த ஆளணியினரே இருப்பதுடன் அங்கு பயன்படுத்தப்படும் செயலொழுங்கு குறுகியதாகும். தனியார் வானொலிச் சேவைகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் தொகை குறைவாக இருப்பதுடன் அதன் செயலொழுங்கும் குறுகியதாக அமைகிறது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் நிலை முற்றிலும் வேறுபட்டதாக இருப்பதுடன் அங்கு பெரும்பாலான நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டே ஒலிபரப்பப்படுகின்றன. பொதுவாக நோக்குமிடத்து பின்வரும் பதவிகளின் இயல்புகளை விளங்கிக் கொள்வது முக்கியமாகும்.

## பணிப்பாளர்

விளையாட்டு, சமயம், இளைஞர், சிறுவர், பெண்கள், செய்தி என்ற வகையில் காணப்படும் பிரிவுகளின் பூரண பொறுப்பு பணிப்பாளரைச் சாரும். அப்பிரிவுகளின் நடவடிக்கைகளை திட்டமிடல், திட்டங்களை மறுசீரமைத்தல், நடை முறைப்படுத்தல் என்பன பணிப்பாளரின் அங்கீகாரத்தின்படியே நடைபெறும்.

## தயாரிப்பாளர்

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புவதற்காகத் தயார் செய்பவர் இவரே. அவர் அதனைத் தனியாகச் செய்யமுடியாது. எனவே தயாரிப்பாளர் என்பவர் ஒரு குழுவின் தலைவராவார். அக்குழுவின் தொழில் நுட்ப உதவியாளர்,ஊடகவியலாளர், இசை வழங்குவோர் இருக்கலாம்.

## அறிவிப்பாளர் / முன்வைப்பவர்

அறிவிப்பாளர் என்பதனால் கருதப்படுவது தயாரிக்கப்படும் பிரதியை முன்வைப்பவர் என்பதாகும். அவருக்கு பேசுவதில் நல்ல தேர்ச்சி இருத்தல் வேண்டும். அறிவிப்பாளர் ஒன்றை வாசிப்பவராக இருப்பார். முன்வைப்பாளர் என்பது அதனை விடச் சற்று ஆக்கத் திறன் வாய்ந்த பணியாகும். எழுதப்பட்ட ஒரு ஆவணத்தினூடாகவோ அத்தகைய ஒரு ஆவணமின்றியே அவர் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற விதமாக கருத்துக்களை முன்வைக்க வேண்டும். இதற்காக மொழி தொடர்பாக தேர்ச்சி மட்டமுமின்றி பல் துறை சார்ந்த அறிவுடன் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.


## தொழில்நுட்பவியலாளர்

ஒரு கோணத்தில் பார்த்தால், தொழில் நுட்பவியலாளரும் ஆக்க ரீதியாகச் செயற்படுபவராகவே உள்ளனர். அவ்வாறில்லாத போது தயாரிப்பாளர் தனது பணியைச் சிறப்பாகச் செய்ய முடியாது. நல்ல கேள்வி ஞானத்துடன உபகரணங்களை நன்கு கையாளும் திறனும் வேண்டும். இசை நிகழ்ச்சிகளின் போது இவர்களின் பொறுப்பு மேலும் அதிகரிக்கும்.

**நிருபர் / செய்தியாளர்**

செய்திகளையும் அறிக்கைகளையும் நிறுவனத்துக்கு வழங்குபவர் இவர்களே. இவர்கள் பிரதேச் செய்தியாளர்களாகவோ சுயாதீனச் செய்தியாளர் களாகவே இருக்கலாம்.

### இ) ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் உள்ளகக் கட்டமைப்பு செயற்பாட்டு அடிப்படையும்




இது ஒரு கட்புல செவிப்புல ஊடகம் என்பதால் அதன் கருமங்கள் சிக்கலாக இருக்கும். எனவே பின்வரும் பதவிகள் வானொலி சேவையை விட வேறுபட்டதாகும்.

**பணிப்பாளர்**

ஒவ்வொரு பிரிவின் பொறுப்பாளராக இருப்பதுடன் அப்பிரிவின் சகல கருமங்கள் குறித்தும் வகை கூறுபவராகவும் இருப்பார். எதிர்காலக் கருமங்களைத் திட்டமிடுவதும், தயார் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை ஒளிபரப்புக்கு முன் பரிசீலனை செய்வதும் ஒளிபரப்புக்கு அங்கீகரிப்பதும் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

### தயாரிப்பாளர்

இது வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளரை ஒத்திருக்கும் பதவியாகும். ஆயினும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கட்புல செவிப்புலக் கூறுகள் கவனிக்கப்படல் வேண்டும். வானொலிச் சேவையை விட எண்ணிக்கையில் அதிகமான ஆளணியினர் இதற்குத் தேவைப்படுவர். சரியாகத் திட்டமிடப்படாத போது வீண் செலவு அதிகரிப்பும் ஏற்பட இடமுண்டு.

### படப் பிடிப்பாளர்

தயாரிப்பாளரின் ஆலோசனைப் படி காட்சிகளைப் படம் பிடிப்பது இவரின் பணியாகும். ஒலி, ஒளிப்பதிப்பு இதில் முக்கியமாகும்.

### ஒலிப்பதிவுக் கலைஞர்

ஒலிகளை உரிய முறையில் பதிவு செய்தல் இவரின் பொறுப்பாகும். சங்கீத, நாடக நிகழ்ச்சிகளின் போது இவர்களின் சேவை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தயாரிப்பாளரின் அறிவுறுத்தலுக்கேற்ப இவர் கருமமாற்றுவார்.

### நெறியாள்பவர்

தயாரிப்பாளரின் அறிவுறுத்தலின் படி ஒலி, ஒளிக் கட்டுப்பாடு, கூட்டல், குறைத்தல் பொருத்தப்பாடு, காட்சி ஒன்றிணைப்பு போன்ற கருமங்களுக்குப் பொறுப்பாக இருப்பார்.

### ஒப்பனைக் கலைஞரும் பின்னணிக் கலைஞரும்

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பின் போது ஒப்பனை என்பது முக்கிய ஒரு அம்சமாக காணப்படுகிறது. தொலைக்காட்சித் திரையில் தெரியும் ஒவ்வொருவருக்கும் பொருத்தமாக, நல்ல தோற்றத்துடன் அழகாக காட்சியளிப்பதற்காக இவர்கள் ஒப்பனை செய்வர். நாடகத்தின் போது உரிய பாத்திரமாக ஒருவரைத் தயார் செய்வதில் இவர்களது பங்கு மிக முக்கியமாகும். நிகழ்ச்சிகளுக்கான பின்னணி அமைத்தல், சுற்றாடலைத் தயார் செய்தல் என்பன விரிவான பணிகளாகும். ஒரு காட்சி பொருத்தமாக அமைவதில் ஒப்பனை, பின்னணி அமைப்பு முக்கியத்துவம் பெறுவது இதனாலாகும்.

### அறிவிப்பாளர் / முன்வைப்பவர்

வானோலிச் சேவையை ஒத்த கடமைகளே இவர்களுக்குண்டு. எனினும் தொலைக்காட்சியில் இவர்கள் தோன்றுவதால் அவர்களிடம் அமையப்பெற வேண்டிய தொழினுட்பத் தேர்ச்சிகள், ஆக்கத்திறன்கள் வானொலி சேவையை விட வேறுபட்டதாகும்.

## 4.3 ஊடக நிறுவமொன்றின் உரிமையில் பயனாளி செல்வாக்குச் செலுத்தும் விதம்.

### அ) ஊடக நிறுவன உரிமையும், நிறுவனக் கொள்கைகளும்.

ஊடக நிறுவன உரிமைக்கும் நிறுவன கொள்கைக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு. ஆனால் அது வெளியே தெரியக் கூடியதாகவிருக்காது. ஊடக நிறுவனங்களில் மட்டுமன்றி எந்த ஒரு நிறுவனத்திலும் அதன் உரிமை அதன் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். ஊடக நிறுவனங்களுக்கும் இது பொருந்தும். ஓர் ஊடக நிறுவனம் தமது கொள்கையை அமைத்துக் கொள்வது உரிமையாளர்களின் தேவையைப் பொறுத்தாகும். இது அரசாங்க, தனியார் ஊடக நிறுவனங்கள் அனைத்துக்கும் பொருந்தும். அரச ஊடகம் என்பது ஊடக நிறுவனங்களாகும். எனவே அரசுக்குச் சொந்தமான ஊடகத்துள் கொள்கையை வகுப்பதில் இவ்வுரிமை செல்வாக்கு செலுத்திடவே செய்யும்.

சுதந்திர ஊடகம் என்ற எண்ணக்கரு ஏற்படுவது அதன் உரிமைகளால் மட்டும் அன்று மாறாக ஊடகவியலாளர்களால் அந்த ஊடகத்தின் கொள்கை தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற கருத்திலாகும். ஆனால் அது எந்த அளவுக்குச் சாத்தியமானது என்பது விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். அந்தக் கருத்தில் நோக்கும் போது உலகில் எந்தவொரு ஊடக நிறுவனமும் தமது கொள்கையை சுதந்திரமாகப் பெறுகின்றன என்பதைக் காணக்கூடியதாக இல்லை.

ஊடக நிறுவன உரிமை, ஊடகவியலாளர் என்பவற்றை ஆராயும் போது தெரிய வருவது ஊடக நிறுவனத் தலைவர்கள் என்போர் அந்த ஊடகத்தின் உரிமையாளர்களன்று. தலைவர் என்போர் நிறுவன உரிமையாளர்களின் கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஊழியர்களாவர். உரிமையாளர் மறைந்திருப்பார். ஊடக நிறுவனத்தில் கடமையாற்றுவோர், அதன் பிரதானிகள் பிரபல்யமான பாத்திரங்களாக இருப்பர். அவர்கள் எந்த வேளையிலும் ஊடக நிறுவனத்தின் சார்பில் கருத்து தெரிவிக்க ஆயத்தமாக இருப்பர்.

உரிமையாளர் கட்டியெழுப்பும் ஊடக நிறுவனக் கொள்கைகளைச் செப்பனிடுவோர் அதன் ஊடகவியலாளர்களே. அதற்கான காரணம் ஊடக நிறுவனங்களை நடத்துவதற்கு வாசகர்கள், நேயர்கள், பயனாளிகள் ஆகியோர் தேவையாக இருப்பதாகும். ஊடக நிறுவனங்களின் கொள்கையை அதன் பயனாளிக்குரியபடி வடிவமைத்து ஆக்கரீதியாக முன்வைக்கும் பணியை ஊடகவியலாளர் மிக நேர்த்தியாகச் செய்வதை நவீன பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களை ஆராயும்போது தெரியவரும்.

அதே நேரம் ஊடக நிறுவனங்களும் சில ஊடகக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணலாம். உதாரணமாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் புகைத்தல், மதுபானம் பற்றிய காட்சிகளை ஒளிபரப்புவதை இடைநிறுத்துவதை ஒரு கொள்கையாக நடைமுறைப்படுத்துவதைக் காணலாம்.

### ஆ) ஊடக நிறுவன உரிமையும், ஊடகவியலாளரும்.

இது ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். ஊடகவியலாளர் என்பவர் ஒரு தொழில் வாண்மையாளர். தொழில் வாண்மையாளர் அவருக்குரிய ஒழுக்கக்கோவையைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளார். அத்தகைய ஒழுக்கக்கோவை தானாகவே தயாரித்துக் கொண்டதாகவும் இருக்கலாம். இவ்விதம் தம் சொந்த ஒழுக்கக் கோவையின் அடிப்படையில் கருமமாற்றிய ஊடகவியலாளர் முற்காலத்தில் இருந்ததாகவும் தம் மனசாட்சிக்கு விரோதமாக ஒன்றைச் செய்வதற்கான உத்தரவு மேலிடத்திலிருந்து கிடைக்குமிடத்து தொழிலைத் துறந்துவிட்டு கொள்கையைக் காப்பாற்றிக் கொண்டதாகவும் வரலாறு கூறுகின்றது. அதே போன்று பொது ஒழுக்கக் கோவையைக் கடைபிடிக்கும் கடமையும் ஊடகவியலாளர்க்குண்டு.

ஓர் ஊடகவியலாளரில் ஊடக நிறுவனம் செல்வாக்கு செலுத்துவது எவ்வாறு? முதலாவதாக ஊடகவியலாளர் என்பவர் ஒரு ஊடக நிறுவனத்தில் ஒரு பதவியில் நியமிக்கப்பட்டுள்ள ஒருவராவார். அதற்காக அவருக்குச் சம்பளம் அல்லது வேதனம் வழங்கப்படும். அது அவருக்கு வழங்கப்படுவது அந்த ஊடக நிறுவனத்தின் கொள்கைகளுக்கேற்ப அவர் கடமையாற்றுவதற்காகும். இதன்படி ஊடக நிறுவனத்தின் கொள்கையை மீறிச் செயற்படும் ஆற்றல் ஊடகவியலாளருக்கு இல்லை.

இதனால் ஓர் ஊடகவியலாளர் தமது ஊடகப்பணியைச் செய்யும் போது நிறுவன உரிமைக்கும், தனக்கும் இடையில் ஒரு சமநிலை காணவேண்டி யேற்படும். அதேபோன்று ஓர் ஊடக நிறுவனம் ஓர் ஊடகவியலாளரை வேலைக்கமர்த்தும் போது அதன் உரிமையாளர்கள் உருவாக்குகின்ற கொள்கைக்கிணங்க அப்பதவி வளங்கல் இடம்பெறவேண்டும். இதனை இரு விதமாக விளக்கலாம். ஒரு வழி அனுபவம் வாய்ந்த ஓர் ஊடகவியலாளனை வேலைக்கமர்த்துவதாகும். அத்தகைய ஒரு ஊடகவியலாளர் எப்படிப்பட்டவர் என்பது பற்றிச் சமூகம் அறிந்துள்ள படியால் அவரின் கொள்கையை நிறுவனக் கொள்கைகளுடன் பொருத்திக் கொள்ள முன்கூட்டியே வாய்ப்புக் கிடைக்கும். அதன்படி குறிப்பிட்ட ஊடகவியலாளரைத் தம் நிறுவனத்தின் ஒரு பதவிக்காக நியமிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க உரிமையாளருக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

## இ) ஊடக நிறுவன உரிமை, ஊடகவியலாளர், பயனாளி

மேலே சுட்டிக் காட்டியதன்படி ஊடக நிறுவன உரிமை, ஊடக நிறுவனத்தின் கொள்கை மற்றும் செயற்பாடுகள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ தலையிடும் என்பது தெளிவு. அத்தகைய தலையீடு ஊடகவியலாளரையும் பாதிக்கும். ஊடகவியலாளர் உரிமையாளர் சார்பில் தம் ஊடகக் கருத்துக்களைக் நெறிப்படுத்துவார். அத்தகைய ஊடகப்பணிகளின் இலக்கு அதன் பயனாளிகள் அல்லது பொதுமக்கள் அல்லது இளைஞர்கள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்களாக இருப்பர். இந்தக் கருத்தில் பார்க்கும் போது பயனாளிகள் அல்லது பொது மக்கள் வர்த்தகரீதியான நுகர்வோர் என்ற நிலைக்குத் தள்ளப்படுவதோடு ஊடகவியலாளர் உரிமையாளர் சார்பில் ஊடகப் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குபவராக உள்ளார்.

இத்தகைய ஊடக சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாக மீண்டும் மீண்டும் கூறினாலும் உண்மையில் நிகழ்வது அதுவன்று. பயனாளிகள் ஊடகச் சந்தையின் கைதிகளாக ஆக்கப்படுகின்றனர்.

இதிலிருந்து வேறுபட்ட ஒரு ஊடகக் கொள்கையை மக்கள் சேவை ஊடகநிறுவனங்களினால் மட்டுமே வழங்கமுடியும்.

ஊடக நிறுவன உரிமை, ஊடகவியலாளர், பொதுமக்கள் என்ற சங்கிலித் தொடரில் மிகப்பலம் வாய்ந்தவர்கள் பயனாளிகள் அல்லது பொதுமக்களே. ஆனால் தம் பலத்தை அறிந்து கொள்ள அவர்களுக்கு இடமளிக்காத வகையில் ஊடகவியலாளர்கள் தம் நிறுவன உரிமையாளர்களின் கொள்கை சார்ந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள ஊடகங்களை நெறிப்படுத்துவதைக் காணக்கூடியதாயுள்ளது. ஊடகத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் பொறுப்புடனும், போதிய விளக்கத்துடனும் கருமமாற்றுவதன் மூலம் மட்டுமே பயனாளிகள் பாதுகாக்கப்படும் ஆற்றல் கிடைக்கும்.

## ஈ) ஊடக நிறுவன உரிமை வாடிக்கையாளர் மீது செலுத்தும் செல்வாக்கின் இயல்பு

இன்றைய ஊடகத் தொகுதியை ஆராயும் போது தெரிய வருவது, ஊடகங்கள் பொதுமக்கள் மீது ஏற்படுத்தும் செல்வாக்கின் இயல்புகளை விளங்கிக் கொள்ளக்கூட முடியாத அளவுக்குக் குழம்பிப் போயுள்ளது என்பதாகும். நிறுவனத்தின் நடவடிக்கைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக முன்வரும் ஊடக ஆய்வாளர்கள், ஊடக நிறுவன பயனாளிகள் மீது பாரிய செல்வாக்கைச் செலுத்துவதை நிருபிப்பதற்கான ஆய்வுத் தளங்கள் காணப்படவில்லை என்று கூறுகின்றனர்.

எனினும் சமூகத்தில் தொடர்தேர்ச்சியாக இடம்பெறும் சம்பவங்களையும், அண்மிய இரண்டு தசாப்த காலங்களில் சமூகம் வழிப்படுத்தப்பட்டுள்ள திசையையும் நோக்கும்போது மனதைக் கவரும் வகிபாகத்தை ஊடகங்கள் நிறைவேற்றுகின்றன என்பதேயாகும். மிக நியாயமான காரணங்களும் வழக்குகளும் முன்வைக்கப்பட்டு இந்த வகிபாகம் நிறைவேற்றப்படுவதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். சிலபோது அது இளைஞர் குரலாக முன்வைக்கப்படுகின்றது. வேறு சில போது அது பெண்கள் குரலாக வெளிப்படுகின்றது. வேறுசில முறைகளில் ஆகக் கூடிய மக்கள் தொகையினர் பயன்படுத்தும் ஊடகமாக வெளிக்காட்டப்படுகின்றது.

பொதுமக்கள் பக்கமாக நின்று நோக்கும் போது, ஊடகங்கள் வெளியிடுவது அவர்களுக்குத் தேவையான விடயங்களை அல்ல. வாடிக்கையாளர்களின் உணர்வுகளைத் தூண்டி, தம் விளம்பரத்தாரர்களின் வர்த்தக நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் விடயங்களே பெருமளவில் வழங்கப்படுகின்றன. மிகச்சிறிய அளவில் அறிவு விருந்து, அழகியல் இரசனை விருத்தி தொடர்பான நிகழ்ச்சிகள் முன்வைக்கப்படுகின்றன. துரதிஷ்ட வசமான நிலமை யாதெனில் அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு அனுசரணையாளர்கள் கிடைப்பதில்லை. எனவே அனுசரணையாளர்கள் தேவைகளை நிறைவேற்றும் நிலமை ஊடக நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஓர் ஊடகத்தின் பயனாளிகள் மீதான செல்வாக்கு எத்தகையது என்பதை விசாரிக்கும் போது தெரியவரும் மற்றுமொரு விடயம் சமூகத்தின் மீது பாரிய செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கான ஊடகங்களின் ஆற்றலாகும். இலங்கையர் சமூகத்தின் நலன்களுக்குத் தேவையான மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்காக ஊடகங்கள் நிறையவே பணியாற்றலாம். ஆனால் கல்வி நிகழ்ச்சிகளை வழங்க ஊடக நிறுவனங்கள் முன்வருவது விளம்பரதாரிகளின் அனுசரணை கிடைக்கும் போதாகும்.

## 4.4 வெகுசன ஊடகநிறுவனத்தின் நோக்கங்கள், கொள்கைகள் மீதான அரசாங்கத்தின் செல்வாக்கு

### அ) ஊடக நிறுவனங்களின் வர்த்தக நோக்கம்.

ஊடகம் என்பது சமூகத்தை நெறிப்படுத்தக்கூடிய ஒரு செயலொழுங்காகும். ஆனால் ஊடக நிறுவனம் என்பது ஒரு வணிகமாகும். அதனை நடத்திச் செல்ல மூலதனம் தேவை. பல்வேறு பராமரிப்புச் செலவுகளைச் செய்ய வேண்டியுள்ளது. பத்திரிகை எனின் பாரிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியபீடமொன்று கடமையில் அமர்த்தப்பட வேண்டுமாயின் வாகனங்கள் தேவை. வேறுபல தொழினுட்ப உபகரணங்களும் தேவை. வானொலிச் சேவைகளுக்கு பெருந்தொகையான முதலீடு

செய்யப்படவேண்டியுள்ளது. பராமரிப்புச் செலவும் ஏராளமுண்டு. தொலைக்காட்சி நிறுவனமொன்றின் நிலை இதனை விடவும் சிக்கலானது. அதனை ஆரம்பிப்பதற்கு பாரிய முதலீடு தேவை. நவீன தொழினுட்ப உபகரணங்களைச் கொள்வனவு செய்ய வேண்டும். அந்த உபகரணங்களைப் பராமரிக்க வேண்டும். அவை காலம் கடக்கும் போது புதியவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டும். ஒரு நிகழ்ச்சியைத் தயார் செய்வதற்கும் கூடப் பெருமளவு செலவுகள் ஏற்படுகின்றன.

இதனடிப்படையில் பார்க்கும் போது ஊடகத்தின் பின்னுள்ள வர்த்தக நோக்கத்தை அதன் நடத்தைக் கோலமே உருவாக்குவது தெரிகிறது. பத்திரிகை நிறுவனமொன்று தனது பத்திரிகைகளை விற்பனை செய்வதன் மூலம் வருமானம் பெறும் ஆயினும் பத்திரிகைகள் அதன் உற்பத்திச் செலவின் விலையில் விற்கப்படுவதாக நீங்கள் நினைக்கின்றீர்களா? முப்பது ரூபா விலை குறிக்கப்பட்ட ஒரு பத்திரிகையின் உற்பத்திச் செலவு நூற்றைம்பது ரூபாய் வரை இருக்கும். அந்த விலைக்கு பத்திரிகைகள் விற்பனை செய்யப்பட்டால் என்ன நடக்கும். விற்பனை நடைபெறாது. அவ்வாறாயின் பத்திரிகையின் விலையை குறைப்பதெப்படி? அதற்காக வேறு வருமான வழிகளைத் தேட வேண்டும். அத்தகைய வருமானங்களினால் பத்திரிகைச் தயாரிப்புச் செலவை ஈடுசெய்ய வேண்டும்.

இவ்வாறு வருமானம் பெறக்கூடிய ஒரு வழி விளம்பரமாகும். ஊடக வரலாற்றை ஆராயும் போது விளம்பரமும், ஊடகமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்திருப்பதைக் காணலாம். எனவே பத்திரிகைப் பக்கங்களின் இடங்களை விற்பனை செய்வதன் மூலமும் வானொலியில் ஒலிபரப்பு நேரத்தை விற்பனை செய்வதன் மூலமும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு நேரத்தை விற்பனை செய்வதன் மூலமும் வருமானத்தை உழைக்க வேண்டிய நிலை ஊடக நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஊடக நிறுவனங்கள் வர்த்தக நோக்கங்களுக்குபடுவது இதனாலே யேயாகும். ஒரு பத்திரிகையின் பிரதிகளை விற்பனை செய்ய முடியுமாயினும் வானொலி அல்லது தொலைக்காட்சி நேரத்தை மட்டுமே விற்க முடியும். வர்த்தக விளம்பரம், அனுசரணை என்ற இரண்டு வரிகளில் இது நடைபெறும். அனுசரணைகளின் போது குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒலி, ஒளிபரப்பு செய்யப்படும் நேரத்துக்கான கட்டணத்தை வெளியார் நிறுவனம் செலுத்துவதாகும். அவ்வாறு அவர்கள் செய்வது ஒரு விளம்பர நன்மை அவர்களுக்கு ஏற்படுவதால் மட்டுமேயாகும்.



படம் :- 4.4.1 விகார வர்த்தக விளம்பரம்

உதாரணமாக கூடிய அளவு மக்களைக் கவராத நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்க வர்த்தக நிறுவனங்கள் முன்வருவதில்லை. எனவே வர்த்தக நிறுவனங்கள் விரும்பும் நிகழ்ச்சிகளை ஏற்றுக்கொள்வது இலத்திரனியல் ஊடகங்களது வர்த்தக நோக்கத்தினைச் சார்ந்ததாகும். இதன்படி ஊடக நிறுவனத்தின் கொள்கைக்கும் வணிக சமூகத்தின் நோக்கங்களுக்கிடையே சமநிலை காணவேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்படும்.

### (ஆ) வெகுசனஊடக நிறுவனங்களின் நோக்கங்களுக்கும் அரசாங்கத்தின் நோக்கங்களுக்கிடையேயுள்ள தொடர்பு

ஒரு பக்கத்தில் அரசாங்கம் பல ஊடக நிறுவனங்களின் உரிமையாளராக வுள்ளது. மறுபக்கத்தில் நாட்டைப் பரிபாலிக்கும் பிரதான அதிகார பீடமாகவும் அரசு காணப்படுகிறது. ஒரு நாட்டின் ஊடகமும் அரச கட்டுப்பாட்டுக்குரிய ஒரு விடயமாகும். அரசில் ஊடக அமைச்சர் இருப்பார். அதன்படி அரசாங்கத்தின் நோக்கங்களுக்கும் நிறுவனங்களின் நோக்கங்களுக்குமிடையே தொடர்பு காணப்படுகின்றதா என்பதை விசாரித்துப் பார்த்தல் பயனுடையதாக இருக்கும்.

முதலில் அரசாங்கத்துக்கு ஊடகம் ஏன் தேவை? என்ற வினாவுக்கு விடை காணப்பட வேண்டும். அரசாங்கம் என்பது ஓர் அரசியல் கட்சியின் அல்லது பல கட்சிகளின் கூட்டினால் நடத்தப்படுவதாகும். ஓர் அரசாங்கத்துக்கு அரசியல் நோக்கம் உருவாவதும் அதனாலேயாகும். இது எந்த அரசாங்கத்துக்கும் எந்த அரசியல் கட்சிக்கும் பொருந்தும். இரண்டாவதாக அரசாங்கம் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. அரசாங்கத்தை நியமிப்பவர்கள் மக்கள் என்பதால் அரசாங்கம் செய்யும் வேலைகளின் உண்மையான நிலமைகளை அறிந்துக்கொள்ளும் உரிமை மக்களுக்குண்டு.

இதன்படி அரசாங்கமொன்றிற்கு வெகுஜன ஊடகத்தின் சேவை பல காரணங்களினால் தேவைப்படுகின்றது.

1. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய தகவல்களைச் சமூகத்திற்குத் தெரிவிப்பதற்கு
2. அரசாங்கத்தை நடத்துவதற்கான பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு
3. அரசாங்கத்தின் நீண்டகால எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்ளக்கூடிய ஒரு சமூகக் கட்டுப்பாட்டை தாபித்தல்.
4. அரசாங்கத்தின் அபிவிருத்தி சார் பணிகள் பற்றி அபிவிருத்தி நோக்கிலான குறை நிறைகளை எடுத்துக் காட்டல்.

இதன்படி மேற்படி விடயங்கள் ஒரு நாட்டின் வெகுஜன ஊடகத்தினால் நிறைவேற்றப்படுமானால் அது அந்த அரசாங்கத்தினதும் அபிலாசையாக அமையும். ஆயினும் நடைமுறையில் அவ்வாறு நிகழ்வதில்லை. அதற்கான காரணம் தனியார் உரிமையுள்ள வெகுசன ஊடகங்கள் அதன் உரிமையாளரின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏற்ப கருமமாற்றுவதாகும். அது எந்த அரசாங்கத்தினதும் நிகழ்ச்சித்திட்டத்துடனும் ஒத்துப் போகாத ஒன்றாக இருக்கலாம்.

இதனால் அரசாங்கம் வெகுஜன ஊடகங்கள் தொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன? என்ற கேள்வி எழுகின்றது. நவீன சமூகத்தில் ஊடக உரிமை என்பது ஒரு மனித உரிமையாக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் அதனைக் கட்டுப்படுத்துவதும் சிரமமாக உள்ளது. ஆகவே இங்கு அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கையாக இருப்பது தனக்கென ஊடகங்களை உருவாக்கி மேற்படி நோக்கங்களை அடைந்து கொள்வதாகும். அரசாங்கம் தனக்கு உரித்தான வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் கருத்தை சமூகமயப்படுத்தும் அதே நேரம் தனியார் வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்தி தமது நிகழ்ச்சித் திட்டத்துக்கேற்ப கருமமாற்றுவர். இதன்போது சில வேளை அரச, தனியார் வெகுசன ஊடகங்களிடையே ஒரு ஒருமைப்பாடு காணப்படவும் முடியும். எனினும் அவ்வாறு தொடர்ந்து நடைபெறாமைக்கான காரணம் அதன் மூலம் வெகுசன ஊடகங்களின் வர்த்தக நோக்கம் முறிவடைவதனாலாகும். பொதுமக்கள் எப்போதும் உணர்வு பூர்வமான ஊடகக் கலை குறித்து ஆர்வம் செலுத்துவதென்பது பொதுவான விடயமாகும். இத்தகைய நிலமையை பாதுகாக்க முடியுமாவது சமூகத்தில் முன்வைக்கப்படும் தகவல்களிடையே ஒரு மோதல் ஏற்படுவதன் மூலமாகும். எனவே அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் வெகுசன ஊடக நிறுவனங்களின் நோக்கத்துக்குமிடையே ஒருமுகப்பாட்டை எதிர்பார்க்க முடியாது. பல்வேறு அந்தரங்கத் தகவல்கள், ஊழல் மோசடிகள் பற்றி வெளிப்படுத்துவதற்கு இம்முரண்பாட்டு நிலமையைப் பயன்படுத்திக் கொள்வதை இன்றைய ஊடகப்பரப்பில் காணக்கூடியதாயுள்ளது.

### இ) வெகுசன ஊடக நிறுவனங்கள் மீதான அரசாங்கத்தின் கடமைகளும், பொறுப்புக்களும்.

சீரான ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு சுதந்திரமான ஊடகத்தொழில் ஒரு நாட்டில் இருக்க வேண்டும். எந்த ஒரு வெகுசன ஊடகத்திற்கும் உரிமையாளர் அல்லது உரிமையாளர்கள் இருப்பது உண்மையாகும். அவர்களின் தனிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் இத்தகைய வெகுசன ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களிடையே நேரடியாக அல்லது மறைமுகமாக முன்வைக்கப்படுவதும் உண்மையாகும். அவ்வாறாயினும் அதனை ஒரு சனநாயகச் சமூகத்தின் இயல்பாகக் கருதி வெகுசன ஊடகங்கள் சுதந்திரமாக இயங்க இடமளிப்பது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

அரசாங்கம் அனைத்து மக்களது பொறுப்பாளர் என்ற எண்ணக்கருவிற்கமைய மக்கள் பிரதிநிதித்துவத்தில் நிலவும் பல்வேறு இயல்புகளை, பல்வேறு பணிகளை சமூகநிலைப்பாட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஊடகத்தொழிலின் பக்கத்திலிருந்து நோக்கினால் அரசாங்கத்தின் கடமையும், பொறுப்பும் வழிப்படுத்தப்பட வேண்டிய இருவழிகளுண்டு.

அதில் ஒன்று, உயர் ஊடகத்தொழில் வாண்மையொன்றைப் பேணுவதற்கும், ஊடகத்தொழில் வாண்மையை விருத்தி செய்வதற்குமான அரச வசதிகள் உதவிகள், அவகாசங்களை விரிவுப்படுத்துவதாகும். இரண்டாவது ஊடகங்களின் பிடியில் சிக்கும் பொதுமக்களின் ஊடக அறிவை விருத்தி செய்யத்தேவையான கல்வி வாய்ப்புக்களை வழங்குவதாகும். இவ்வாறு தான் ஊடகக் கைத்தொழிலை சீரான நிலமைக்குக் கொண்டு வர முடியும்.

### ஈ) ஊடகத்தொழில் மீது அரசாங்கத்தின் நேரடி மறைமுகத் தலையீடுகள்.

இத்தலைப்பு தொடர்பான விடயங்களைப் பொறுத்தமட்டில் இலங்கையில் நல்ல அனுபவங்கள் நிகழ்ந்து உள்ளன. அரசாங்கத்தின் நேரடித் தலையீடாக ஏற்கனவே சுட்டிக் காட்டியதன்படி பத்திரிகை நிறுவனங்களை அரசுடமையாளர்கள், முத்திரையிடல் என்பனவற்றை கூறலாம். விசேட சமூக நிலமைகளின் போது ஒவ்வொரு காலப்பகுதியில் அரசாங்கம் அத்தகைய தீர்மானங்களை எடுத்துள்ளமையை இலங்கையின் ஊடக வரலாற்றைப் படிப்பவர்கள் தெரிந்து கொள்ள முடியும். இத்தகைய நேரடித் தலையீடுகளுக்கு மேலதிகமாக பல்வேறு மறைமுகத்தலையீடுகள் அவ்வப்போது நடைபெறுவதுண்டு. ஊடகவியலாளர்களின் பதவிகளை மாற்றுதல் அவர்களின் கடமை இயல்புகளை மாற்றுதல் என்பன இவற்றுள் சிலவாகும்.

அதே போன்று மக்கள் பாதுகாப்பு தொடர்பான சில நடவடிக்கைகளின் போது வெகுஜன ஊடகங்கள் மீது அரசு சில மட்டுப்பாடுகளை விதிக்க நேரிடும். உதாரணமாக அவசரக்காலச்சட்டத்தின் கீழ் ஊடகத் தகுதி வாய்ந்த அதிகாரிகளை ஊடக நிறுவனங்களுக்கு நியமித்தலைக் கூறலாம். அதன் போது இடப்படும் நியமனங்களினால் வெகுஜன ஊடகங்களின் சுதந்திரச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. செய்திகளை வெளியிடுவதற்காக தகுதி வாய்ந்த உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியிருப்பது இம்மட்டுப்பாட்டுக்கான காரணமாகும். ஆயினும் இத்தகைய மட்டுப்பாடுகள் குறுகிய காலத்தில் தளர்த்தப்படும்.

பத்திரிகை ஊடகத்தை முறைப்படுத்தும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட இலங்கைப் பத்திரிகையாளர் சபையும் ஒருவகை அரசாங்கத் தலையீடாகும். பத்திரிகைச் சபைச் சட்டமூலத்தில் குறிப்பிட்டுள்ளமைக்கமைய பத்திரிகையாளர்

கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கக் கோவையொன்று வெளியிடப்பட்டுள்ளது. (இது பற்றி தரம் 11 நூலில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது) அதிலுள்ளதன் படி ஒரு பத்திரிகையாளர் தமது தகவல்கள் மூலங்களை நீதிமன்றத்தின் முன் கூட வெளியிடாதிருப்பதற்கான சட்டப் பாதுகாப்பு பெறப்பட்டுள்ளது.

வெகுஜன ஊடக நிறுவனங்களின் செயற்பாடு குறித்து அரசாங்கத்தின் மறைமுகமான தலையீடுபற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து முன்வைக்கப்படுவதைக் காணலாம். ஒரு பக்கத்தில் பார்க்கும் போது அத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான சான்றுகள் பத்திரிகை நிறுவனத்திடம் இருக்கலாம். மறுபக்கத்தில் அவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருப்பதனால் அரசாங்கத்தின் தலையீட்டுக்கான தூண்டல் இழிவளவாகின்றது.

எல்லா நாடுகளிலும் போல இலங்கையிலும் எந்த ஒரு அரசாங்கத்துக்கும் வெகுஜன ஊடகங்களுக்குமிடையில் முடிவற்ற போராட்டம் காணப்படுகின்றது. அப்போராட்டம் வெகுஜன ஊடகங்களின் நிலவுகைக்கு மட்டுமன்றி அரசாங்கத்தின் நிலவுகைக்கும் அனுகூலமாகவுள்ளது. ஏனெனில் உண்மையை அறிந்து கொள்வதற்கும் உண்மையென முன்வைக்கப்படும் போலிகளை ஊடுருவிப் பார்க்கவும் இப்போராட்டம் உதவுகின்றது என்பதனாலாகும்.

**ஒப்படை 4**

1 இலங்கையின் ஊடக நிறுவனங்களின் வளர்ச்சியை விபரிக்குக.

2 ஒரு வெகுஜன ஊடக நிறுவனத்தின் உள்ளக செயற்பாட்டின் இயக்கத்தை விளக்குக.

3 வெகுஜன ஊடக நிறுவனத்தின் நோக்கங்கள், கொள்கைகள் எவையென சுட்டிக்காட்டுக.

4 வெகுஜன ஊடகங்கள் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய பணிகள் எவையென விபரிக்குக.

5 வெகுஜன ஊடகங்களின் நிலவுகை பெரும்பாலும் வர்த்தக விளம்பரங்களுக்குள்ளேயே தங்கியுள்ளது. இதுபற்றிய உங்களது கருத்தை முன்வைக்குக.

6 உங்கள் பிரதேசத்தில் பழுதடைந்துள்ள பாதைபற்றிய ஒரு செய்தியை தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்புவதற்காக தயார் செய்க.

